# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (வேலைவாய்ப்புப் பிரிவு)

| வ எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை / தொலைபேசி / நிகரி / விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | **<u>வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டம்</u>**<br><br>**படித்து வேலை இல்லாத பள்ளியிறுதி தேர்ச்சி பெற்றவர்களுக்கு பிரதி மாதம் ரூ.150/—, மேல்நிலை கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு பிரதி மாதம் ரூ.200/— மற்றும் பட்டதாரி தேர்ச்சி பெற்றவர்களுக்கு பிரதி மாதம் ரூ.300/—ம் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படும்.** | 1. பயனாளி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்து ஆண்டுகள் உயிர்ப் பதிவேட்டில் காத்திருத்தல் வேண்டும்.<br>2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.24,000/—க்கு மிகைப்படலாகாது,<br>3. உச்ச வயது வரம்பு 40 ஆண்டுகளுக்கு மிகைப்படலாகாது. (ஆதிதிராவிட / பழங்குடியினருக்கு உச்ச வயது வரம்பு 45 ஆண்டுகளுக்கு மிகைப்படலாகாது.)<br>4. பயனாளி அரசு நிறுவனங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ பணிபுரிபவராக இருத்தலாகாது. சுய தொழிலிலும் ஈடுபடலாகாது.<br>5. பயனாளி பள்ளி அல்லது கல்லூரியில் பயிலும் முழு நேர மாணாக்கராக இருக்கலாகாது.<br>6. பயனாளி குறைந்த பட்சம் கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் அவசியம். | 1. கலம்(3)ல் இனம் 1 முதல் 6 வரை இடம்பெறும் முற்படு தகுதிகளை உறுதி செய்யும் வகையில் பயனாளி வருவாய்த் துறையிலிருந்து ஒரு ஒருங்கிணைந்த சான்றிதழைப் பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விண்ணப்பத்துடன் அளிக்க வேண்டும்.<br>2. பயனாளி ஏதாவதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் தமது பெயரில் சேமிப்புக் கணக்கு ஒன்று துவக்க வேண்டும். | உரிய மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் தலைவர் (உதவி இயக்குநர்/ மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்) | ஆணையர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை—32, தொலைபேசி 22500149 & 22500124 நிகரி : 044—22501595 |